FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2016

## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

01) ஆளிடைத் தொடர்பாடல் என்பது நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தொடர்பாடல் சந்தர்ப்பமாகும். குழுத் தொடர்பாடலுடன் ஒப்பிடும் போது அதிலுள்ள முனைப்பான இயல்பு
(1) தொடர்பாடலியலாளர் மொழியைப் பயன்படுத்தல்
(2) பெறுநர் நன்றாக செவிமடுத்தல்
(3) தொடர்பாடவியலாளரினதும் பெறுநரினதும் வகிபாகங்கள் நிரந்தரமாக இருத்தல்
(4) வாய்மொழியற்ற தொடர்பாடல் வலுவுள்ளதாக இருத்தல்
(5) ஒரு நபர் மாத்திரம் இருத்தல்

02) காகமும் வடையும் பற்றிய கதையை வகுப்பறையில் கற்பித்த ஆசிரியர் கதையில் உங்களை மிகவும் கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரையும் படி மாணவர்களுக்குக் கூறினார். மாணவர்களிடமிருந்து ஆசிரியர் எதிர்பார்க்கக் கூடியது
(1) ஓவியம் பற்றிய திறனை அளத்தல்
(2) படைப்புத் தொடர்பாடல் திறன்களை இனங்காணுதல்
(3) யாதாயினும் ஒன்றை நிச்சயமாக இனங்காணும் ஆற்றலை அறிந்து கொள்ளல்
(4) கலை தொடர்பாக உள்ள விளக்கத்தை அவதானித்தல்
(5) நாட்டார் கதை பற்றிய விளக்கத்தை இனங்காணல்

03) ஒரு மேடை நாடகத்தில் அதிகமாகக் காணக்கூடியதாக இருப்பது
(1) முறைசார்ந்த, வாய்மொழி, செவிப்புல, கட்புலத் தொடர்பாடல் ஆகும்.
(2) வாய்மொழி, வாய்மொழியற்ற, செவிப்புல, கட்புலத் தொடர்பாடல் ஆகும்.
(3) செவிப்புல, வாய்மொழி, முறைசாரா, கட்புலத் தொடர்பாடல் ஆகும்.
(4) வாய்மொழி, வாய்மொழியற்ற, முறைசாரா எழுத்துத் தொடர்பாடல் ஆகும்.
(5) கட்புல எழுத்து முறைசார்ந்த, முறைசாராத் தொடர்பாடல் ஆகும்.

04) தொடர்பாடவியலாளருக்கும் பெறுநருக்குமிடையில் இருக்கும் ஒத்த தன்மை பற்றி மிகவும் நன்றாக விபரிப்பது
(1) வில்பர் ஸ்ராம் இன் மாதிரி
(2) ஹரஸ் டி. லாஸ்வெல் மாதிரி
(3) ஷெனோன் வீவர் மாதிரி
(4) ஸ்ராம் ஒஸ்குட் மாதிரி
(5) டேவிட் கே. பெர்லோ மாதிரி

05) இலத்திரனியற் தொடர்பாடற் செயற்பாட்டில் தடையாக அமையாதது
(1) ஆகாய விமானம் மிக உயரமாகப் பறத்தல்
(2) சூழலில் உயர் வெப்பநிலையும் ஈரப்பதனும் இருத்தல்
(3) பெறுநர் நோய்வாய்ப்பட்டிருத்தல்
(4) ஊடகம் பற்றி அறியாதிருத்தல்
(5) மூடுகை வீச்சியினுள் (*coverage*) இருத்தல்

06) பெறுநர் பற்றிய மிகச் சரியான கூற்று
(1) இரு நபர்கள் இல்லாத பட்சத்தில் பெறுநர் காணப்படமாட்டார்.
(2) பெறுநரின் வகிபங்கு மாற்றப்படாது.
(3) வியாக்கியானம் செய்யக்கூடிய திறன்களைப் பெறுநர் எப்போதும் கொண்டிருப்பார்.
(4) பெறுநரின் விளங்கறிவு சமனாக இருக்கமாட்டாது.
(5) பெறுநரின் இரசனை பகுதி பரந்திருக்கக் காணப்படும்.

07) இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் உருவாக்கத்தில் வலுவான போட்டித்தன்மை அதிகரிப்பதற்குக் காரணம்
(1) அரசியல் குடும்ப அதிகாரத்தின் உறவுநிலை.
(2) வரையறுத்த அளவில் காணப்படும் அலைவரிசை ஒதுக்கீட்டு அமைப்பு.
(3) வர்த்தக வாணிப முயற்சிகளின் நேரடிப் பங்கேற்பு காணப்படுதல்.
(4) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான பரந்த மத்தியஸ்தப் பணி.
(5) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையின் அனுசரணையாளராகச் செயற்படுதல்.

08) சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும் வகையில் முரண்பாடுகளைப் பயன்படுத்தக் கூடியதாக அமையும் வழிமுறை
(1) தீர்வு (2) ஒடுக்குதல் (3) முகாமைத்துவம்
(4) மத்தியஸ்தம் (5) நிலைமாற்றுதல்

09) பூகோள பண்பாட்டின் விருத்தி நிகழத் தொடங்கியது
(1) 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில்
(2) உரோமானிய காலத்தின் இறுதியில்
(3) நவீன காலத்தின் தொடக்கத்தில்
(4) மத்திய காலத்தின் இறுதியில்
(5) புராதன காலத்தின் இறுதியில்

10) தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களை மாத்திரமே பார்த்து வந்த சாந்தனுக்கு, ஜப்பான் நாட்டுத் தொலைக்காட்சி நாடகமொன்றை முதற் தடவையாகப் பார்த்த போது அதன் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வது கடினமாக இருந்தது. தொடர்பாடலின் பார்வையின் அடிப்படையில் இது
(1) ஒரு பண்பாட்டு அதிர்வு
(2) பின்னூட்டத்தின் குறைபாடு
(3) இரசனையுடன் தொடர்புடைய ஒரு பிரச்சினை
(4) ஆழ்பரிவு (*empathy*) தொடர்புடைய பிரச்சினை
(5) அனுபவக் களம் (*Field of experience*) தொடர்புடைய பிரச்சினை

11) ஊடக எழுத்தறிவு என்பது
A - செய்திப் பத்திரிகையை வாசிக்கவும் எழுதவும் உரிய ஆற்றல்
B - வெகுஜன ஊடக செய்திகளை இனங்காண்பதற்கு உள்ள ஆற்றல்
C - வெகுசன ஊடக செய்திகளை திறனாய்வுடன் விளங்கும் ஆற்றல்
D - வெகுசன ஊடகங்களிலிருந்து உருக்களை புள்ளி விபரங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்
மேற்குறித்த கூற்றுக்களில் உண்மையானவை
(1) A, C ஆகியன மாத்திரம்
(2) A, D ஆகியன மாத்திரம்
(3) B, C ஆகியன மாத்திரம்
(4) C, D ஆகியன மாத்திரம்
(5) A, B ஆகியன மாத்திரம்

12) புகழ் கலாசார எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட காரணியாக அமையக் கூடியது
(1) சமூக மரபுகள் (2) சட்ட வரையறைகள் (3) நாட்டாரியல்
(4) வெகுசன ஊடகம் (5) ஒழுக்க நெறிகள்

13) மாற்று ஊடகம் ($Alternative$) தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஜனரஞ்சக கலாசாரத்திற்கு சார்பானது.

B - ஜனரஞ்சக கலாசாரத்திற்கு எதிரானது.

C - இலாப நோக்குக் கொண்டமைந்தது.

D - சமூக மாற்றத்தை மையமாகக் கொண்டு இயங்குதல்

E - பிரதான ஊடகத்துடன் இணைந்து இயங்குவது

மேற்படி கூற்றுக்களில் மாற்று ஊடக இயல்பைப் பிரதிபலிப்பன

(1) A யும் C யும் மாத்திரம்

(2) B யும் D யும் மாத்திரம்

(3) C யும் E யும் மாத்திரம்

(4) B யும் D யும் E யும் மாத்திரம்

(5) A யும் C யும் D யும் E யும் மாத்திரம்

14) லெனின், மாக்ஸ், ஏஞ்சல் ஆகியோரின் சிந்தனைகள் அடையாளப்படுத்துவது

(1) சோவியத் பொதுவுடமைக் கோட்பாட்டை

(2) சமூகப் பொறுப்புக் கோட்பாட்டை

(3) தாராண்மைவாதக் கோட்பாட்டை

(4) சுதந்திரவாதக் கோட்பாட்டை

(5) ஆதிக்கவாதக் கோட்பாட்டை

15) ஊடக தர்மத்தை பேணுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் மிகவும் சிறந்த வழிமுறையாக அமையக்கூடியது

(1) சுய ஊடக ஒழுக்கக் கோவையைப் பின்பற்றுதல்

(2) ஊடக தணிக்கையை மேற்கொள்ளுதல்

(3) சட்ட ஏற்பாடுகளை விரிவாக்குதல்

(4) ஊடக தர்மத்தை எடுத்துக் கூறுதல்

(5) ஊடக நிறுவன ரீதியான தர்மத்தைப் பேணுதல்

16) ஆக்க ரீதியான தொடர்பாடல் வடிவங்களில் விபரண எழுத்துகளும் உள்ளடங்குகின்றன. பின்வருவனவற்றுள் விபரண எழுத்து வடிவத்தின் இயல்பாக அமையாதது

(1) தகவல்களை உள்ளவாறு அறிக்கையிடுவன ($Reporting$)

(2) உணர்வூட்டுவன ($Feelings$)

(3) உணர்ச்சியூட்டுவன ($Emotions$)

(4) உணர்வுப் பெறுமானமூட்டுவன ($Sentiments$)

(5) பெயர்ச் சொற்களை விபரிக்கும் சொற்களை கொண்டமைந்தன ($Ajectivies$)

17) "ஊடக கலாசாரம் மக்கள் கலாசாரத்தை பின்தள்ளிவிட்டு முனைப்பு பெற்றுள்ளது." பின்வருவனவற்றுள் கலாசாரப் பரிமாற்ற செயன்முறையின் விளைவு அல்லாதது

(1) நாடுகளுக்கிடையில் பரஸ்பரம் ஒத்துழைப்பை உருவாக்கும்.

(2) இதன் காரணமாக சமூக அபிவிருத்தி உருவாகும்.

(3) இதன் காரணமாக முரண்பாடு உருவாகும்.

(4) சமூக சுகவாழ்வு உருவாகும்.

(5) சமூக முரண்நிலையில் இழிவு நிலையை உருவாக்கும்

18) ஊடக விமர்சகர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்பு அல்லாதது

(1) ஊடகம் பற்றிய குறிப்பிட்ட அளவு அறிவு

(2) ஊடகம் பற்றிய பரந்தளவு அறிவு

(3) பெறுநர் பற்றிய ஆழ்ந்த அறிவு

(4) ஊடகத்தின் மீது நேரடி மறைமுகமாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய அறிவு

(5) ஊடக உள்ளடக்கம் பற்றிய அறிவு

The National e-learning Portal for The General Education

19) ஞாபக செயன்முறையை பிரதிபலிக்காத கூற்று
   (1) ஞாபக செயன்முறை உளவியல் செயன்முறைக்குட்பட்டது.
   (2) ஞாபக செயன்முறை நுண்ணறிவுச் செயன்முறைக்குட்பட்டது.
   (3) ஞாபகத்திற்கு செயல்முறை வழி (*Practical way*) உயர்மட்ட செயன்முறைக்குட்பட்டது.
   (4) ஞாபகச் செயல்முறை உயர்மட்ட செவிமடுத்தல் செயன்முறைக்குட்பட்டது.
   (5) ஞாபகச் செயல்முறைக்கு செயல்முறை வழி இழிவுமட்ட செயன்முறைக்குட்பட்டது.

20) முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக ஒரு தொகுதி மாணவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.
   ✶ ரகு - முரண்பாட்டை நேர்முறையில் (*Positive*) அணுகுதல்
   ✶ குமார் - முரண்பாட்டை உடன்பாடான நிலைக்கு இட்டுச் செல்லல்
   ✶ பாலன் - முரண்பாட்டை மறுத்தலுக்கு உட்படுத்தல்
   ✶ மாதவன் - முரண்பாட்டினை பயங்கர நிலை அழிவு மட்டம் நோக்கி நகர்த்துதல்
   மேற்படி கூற்றுக்களில் முரண்பாட்டு முகாமைத்துவ எண்ணக்கரு தொடர்பில் சரியான இயல்பு நிலைகளை வெளியிட்டவர்கள்
   (1) ரகு மற்றும் பாலன்
   (2) ரகு, பாலன் மற்றும் கஜன்
   (3) ரகு, குமார் மற்றும் கஜன்
   (4) குமார், பாலன் மற்றும் மாதவன்
   (5) குமார், பாலன், கஜன் மற்றும் மாதவன்

21) ஊடக அறிவித்தல் (*Press Release*) செயன்முறையின் இயல்பாக கொள்ள முடியாதது
   (1) அனைத்து ஊடகங்களுக்கும் பொருந்தும்படி தயாரிக்கப்பட்டிருத்தல்
   (2) அறிவித்தலில் உத்தியோகபூர்வ ஒப்பம் இடப்பட்டு இருத்தல்
   (3) அறிவித்தலின் உள்ளடக்க தகவல்கள் பொருத்தமானதாக அமைந்திருத்தல்
   (4) அறிவித்தலின் உள்ளடக்கம் பரந்துபட்ட நோக்கங்களைக் கொண்டதாக இருத்தல்
   (5) அறிவித்தலுக்கான தகவல் கவனமாக தெரிவு செய்யப்பட்டிருத்தல்

22) ஊடகக் கழகத்தின் செயற்திட்ட ஒழுங்கமைப்பாளர்களினால் முன்னெடுக்கப்படக்கூடிய ஆக்கச் செயற்றிட்டத்திற்கு எடுத்துக்காட்டுக்களாக அமைவன
   (1) சுவர்ப் பத்திரிகை வெளியீடு புகைபடக் கண்காட்சி
   (2) கவிதை ஆக்கம், செய்தி எழுதுதல்
   (3) மாணவர் கற்றலுக்காக தொலைக்காட்சியைப் பயன்படுத்துவது தொடர்பான ஆய்வு
   (4) நல்ல பாடல் ஒன்றை இரசித்தல், நாடகம் ஒன்றை விமர்சித்தல்
   (5) சமாதானம் தொடர்பான பாடல் தயாரிப்பு காட்டூன் கண்காட்சி

23) மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதன் நோக்கமாக அமையாதது
   (1) நிகழ்ச்சித்திட்ட இலாபங்கள் முன்கூட்டியே அறிவித்தல்
   (2) மக்கள் தொடர்பு நோக்கங்களை நிச்சயித்தல்
   (3) பௌதீக மானிட வளத் தேவையைக் கணிப்பிடல்
   (4) தேவைக்கேற்ப முன்னுரிமைப் பட்டியலை தீர்மானித்தல்
   (5) நிகழ்ச்சித் திட்டத்தின் பொருத்தப்பாட்டை மதிப்பிடல்

24) செய்தி மூலங்கள் தொடர்பான சில அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.
   A - செய்தியை உருவாக்குவதில் அவை பங்கெடுக்கின்றன.
   B - பின்னூட்டச் செயன்முறையை ஆதரிக்கின்றன.
   C - ஒரு சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்களை வழங்குகின்றன.
   D - தொடர்பியலாளரின் பண்பாட்டுப் பின்புலத்தை அடையாளம் காண உதவுகின்றன.
   மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை
   (1) A யும் B யும் மாத்திரம்
   (2) A யும் C யும் மாத்திரம்
   (3) A யும் D யும் மாத்திரம்
   (4) B யும் D யும் மாத்திரம்
   (5) C யும் D யும் மாத்திரம்

25) இன்றைய நாளில் வாழும் மனிதன் தனது எதிர்கால நடவடிக்கைகளை தனது கடந்த காலங்களைக் கொண்டு திட்டமிட்டுக் கொள்கிறான். ஏனைய விலங்குகளிடம் இல்லாத இந்தத் திறனை மனிதன் பெற்றுக் கொண்ட காரணம்
(1) நினைவுபடுத்தலுக்கும் கற்பனைக்கும் இட்டுச் செல்லும் மொழியின் குறியீட்டுத்தன்மை
(2) பழங்காலம் முதற்கொண்டு மொழியைக் குறியீட்டு வழியாக மனிதன் கையாண்டமை
(3) மொழியைப் பயன்படுத்தி கொள்ளும் மனிதனுக்கு குறியீட்டு வெளிப்படுத்துகை இலகுவாக அமைந்தமை
(4) மனிதப் பரிணாம வளர்ச்சியினூடாக அறிவை அடைந்து கொள்வதற்கு மொழியைப் பயன்படுத்தும் உரிமையை மனிதன் பெற்றுக் கொண்டமை
(5) மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையிலான உறவு மனிதத் தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படையாக அமைந்தமை

26) ஒரு குறிப்பிட்ட அமைப்பு தனது வளர்ச்சி பற்றி அறிவிப்பதற்காக ஒரு ஊடக மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தது. அதற்கான வலுவான தொடர்பாடல் செயன்முறையாக அமைவது
(1) ஊடக நிறுவனங்களிலிருந்து வரும் நபர்கள் நன்றாகக் கவனிக்கப்பட வேண்டும்.
(2) கலந்துரையாடல் குறித்த இலக்குடன் நடத்தப்படல் வேண்டும்.
(3) நேரமுகாமைத்துவம் சரியாக இடம்பெற வேண்டும்.
(4) தகவல்கள் அடங்கிய ஆவணம் வழங்கப்பட வேண்டும்.
(5) கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும்.

27) வெகுசன ஊடகங்களின் சமூகப் பொறுப்புணர்வுக் கோட்பாடு (*Social Responsibility Theory*)
A - ஊடகச் செயன்முறையில் அரசின் தலையீட்டை இழிவளவாக்குகிறது.
B - பல்வேறு பிரதிநிதித்துவங்களுக்கான வெளியை வழங்குகிறது.
C - தேவைப்படும் போது அரசின் விதிமுறைகளை எதிர்பார்க்கிறது.
D - இலாபம் ஈட்டும் குறிக்கோள் மற்றும் போட்டித் தன்மையை இழிவளவாக்குகிறது.
மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை
(1) A, B ஆகியன மாத்திரம்
(2) A, C ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்

28) ஆட்சியாளர்கள், மிக முக்கிய பிரமுகவர்கள், கலைஞர்கள் ஆகியோரால் இன்றைய நாட்களில் துரிதமான வெகுசன தொடர்பு முறையாகப் பயன்படுத்தப்படக்கூடிய மிகப் பொருத்தமான வழிமுறை பின்வருவனவற்றுள் எது?
(1) பத்திரிகையறிக்கைகளை வெளியிடல்
(2) சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துதல்
(3) பத்திரிகையாளர் மாநாடுகளை நடாத்துதல்
(4) தொலைக்காட்சி சம்பாஷணைகளை மேற்கொள்ளல்
(5) பொதுக் கூட்டங்களை நடாத்துதல்

29) "சீன அபிவிருத்தி தொடர்பாடல் கட்டமைப்பில் மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்தல் திட்டத்துடன் மேலும் ஐந்து உப திட்டங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது" பின்வரும் உப திட்டங்களில் உள்ளடங்காத திட்டமாக அமைவது
(1) அதிகாரவர்க்க பலத்தை இழிவளவாக்குதல்
(2) அதிகார வர்க்க பலத்தை உயர்மட்டத்தில் பேணுதல்
(3) நல்லொழுக்கத்தை உறுதிப்படுத்தல்
(4) மக்கள் - அரசு இடைவெளியைக் குறைத்தல்
(5) மொழிமயவாக்கத்திற்கு அடிமைப்படாதிருத்தல்

30) வானொலி ஊடக ஆய்வு ஒன்றின் மூலம் எதிர்பார்க்கக்கூடிய அனுகூலம் அல்லாதது
(1) நேயர்கள் வானொலி நிகழ்ச்சியில் பங்கு கொள்ள முடியும்.
(2) செவிமடு வலயம் என்னவெனக் கண்டறிய முடியும்.
(3) செவிமடுப்போரின் மனப்பாங்கை அறிய முடியும்.
(4) செவிமடுப்போரின் விருப்பு வெறுப்பை விளங்கிக் கொள்ளமுடியும்.
(5) வானொலி நிறுவன செயற்பாட்டு உள்ளடக்கத்தை மாற்றியமைக்க முடியும்.

31) ஊடகங்களின் செயற்பாடுகளை விஞ்ஞான முறையூடாக ஆராய்கின்ற செயன்முறை ஊடக ஆய்வுக்குட்பட்டதாகும். பகுப்பாய்வின் ஊடாக இனங்காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் செயற்பாடு பின்வருமாறு அழைக்கப்படும்
(1) தகவல் சேகரித்தல்
(2) தகவல் பகுப்பாய்வு
(3) மதிப்பீட்டு செயன்முறை
(4) பிரச்சினை இனங்காணல்
(5) முன்மொழிவுகள்

32) "வளம் சீராக பகிரப்படாத போதிலும் இரு குழுக்களுக்கிடையே தொடர்பின்மை ஏற்படுகின்ற போதிலும் ஒரு குழு இன்னொரு குழு மீது தவறான எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்கள் என முரண்பாட்டுக்கான சூழ்நிலைகள் நீட்சி பெறுகின்றன. பின்வருவனவற்றுள் முரண்பாட்டு உணர்திறன் மிக்க அறிக்கையிடலுக்கான வழிமுறையாக அமையாதது
(1) முரண்பாட்டினை நியாயமானதாகவும் சமநிலை பேணும் வகையிலும் அறிக்கையிடல்
(2) முரண்பாட்டு பின்னணி காரணங்களை அறிக்கையிடல்
(3) முரண்பாட்டு சூழ்நிலைகளை மனவெழுச்சி நிலைகட்கு உட்பட்ட வகையில் அறிக்கையிடல்
(4) முரண்பாட்டு தாக்கத்தை அறிந்து கொள்ளும் வகையில் அறிக்கையிடல்
(5) முரண்பாட்டு இணக்கப்பாடு தொடர்பிலான முயற்சிகளை அறிக்கையிடல்

33) பின்வரும் தொடர்பாடல் மாதிரிகளில் பரிமாற்ற மாதிரிக்கு எடுத்துக்காட்டாக அமைவது
(1) பர்லோ மாதிரி
(2) ஷெனோன் மற்றும் வீவர் மாதிரி
(3) லாஸ்வெல் மாதிரி
(4) வெசுட்லி மாதிரி
(5) ஒஸ்குட் மாதிரி

34) "ஆபிரிக்க, ஆசிய கலாசார பெறுமானங்கள் புறக்கணிக்கப்பட்டும், குறைவாக மதிப்பிடப்பட்டும் மேலைத்தேச கலாசார விடயங்கள் உயர்மட்டத்தில் மதிக்கப்படுதல்'' பின்வரும் செயன்முறையினால் ஆகும்.
(1) ஊடக விமர்சனத்தினால்
(2) ஊடக கலாசாரத்தினால்
(3) ஊடக ஆய்வினால்
(4) ஊடக ஒழுக்க நெறிகளினால்
(5) ஊடக சட்டங்களினால்

35) "மோதல் முக்கோணியில் கல்தூங் சூழமைவு, உளப்பாங்கு, நடத்தை ஆகிய மூலக்கூறுகளை உள்ளடக்கியுள்ளார்'' மேற்படி மூலக்கூறுகளுடன் தொடர்புபட்ட காரணியாக அமையக் கூடியன முறையே
(1) எண்ணம், சண்டை, பயம்
(2) உணவு, சந்தேகம், பயமுறுத்தல்
(3) நிலம், நம்பிக்கை, தாக்குதல்
(4) வாதப்பிரதிவாதம், பணம், வெறுப்பு
(5) தாக்குதல், பதவி, அச்சம்

36) பிரச்சினையுடன் தொடர்புபட்ட தரப்புக்களின் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டு பொது உடன்பாட்டுக்கு கொண்டு வந்து பிரச்சினையைத் தீர்த்தல்'' அணுகுமுறை பின்வருமாறு அழைக்கப்படுகிறது
(1) மத்தியஸ்த அணுகுமுறை
(2) தனிப்பட்ட அணுகுமுறை
(3) நீதிமன்ற அணுகுமுறை
(4) கிராமமட்ட அணுகுமுறை
(5) பொலீஸ் அணுகுமுறை

37) சமூகத் தொடர்பாடல் வலுவுள்ளதாக அமைவதற்கு உதவக் கூடியது
(1) ஆழ்பரிவு ($Empathy$)
(2) சுய எண்ணக்கரு ($Self\ Concept$)
(3) பரப்புரை ($Propaganda$)
(4) கருத்தியல் ($Idewlogy$)
(5) மாறா எண்ணக்கரு ($Stereo\ Type$)

38) உலகமயமாக்கல் செயன்முறை தொடர்பில் மாணவர் சிலர் உரையாடிய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
நயன் - உலகமயமாக்கலின் விளைவால் புதிய தாராண்மைவாதம் தோற்றம் பெற்றுள்ளது.
சிவா - ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விரிவாக்கம் உலகமயமாக்கலுக்கு அடிப்படையானது
கரன் - தேசிய அரசு நலிவடைந்து பூகோள சிந்தனை முதன்மை பெறுதல்
சயன் - தேசிய தனித்துவம், அடையாளங்கள் உயர்மட்டத்தில் பேணப்படுதல்
(1) சிவா, நயன் கூற்றுக்கள்
(2) சிவா, கரன் கூற்றுக்கள்
(3) நயன், சிவா, கரன் கூற்றுக்கள்
(4) சிவா, கரன், சயன் கூற்றுக்கள்
(5) நயன், கரன், சிவா, சயன் ஆகிய எல்லோரின் கூற்றுக்கள்

39) தொடர்பாடலின் இயல்பை அறிமுகம் செய்வதில் மிகப் பொருத்தமான கருத்தாக அமைவது
(1) தொடர்பாடல் மொழியின் அடிப்படையிலானது
(2) தொடர்பாடல் ஓர் இருவழிச் செயன்முறையாகும்.
(3) தொடர்பாடல் ஒரு செயன்முறையாகும்.
(4) தொடர்பாடல் இடையூறைக் கொண்டிருக்கும்.
(5) தொடர்பாடல் பிரதிபலிப்புகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

40) ஒரு படைப்பாக்கச் செய்தியில் காணக்கிடைக்கக்கூடிய அதி முக்கியமான அம்சம்
(1) அநுமானிப்பு இயல்பு
(2) ஒலி - காட்சி இயல்பு
(3) பலவண்ண இயல்பு
(4) சுயம் அல்லது உண்மைத்தன்மை
(5) அளிக்கை செய்யும் இயல்பு

41) ஊடகங்கள் - இலக்கு வைக்கும் பிரிவினராக உள்ளடங்குவோர்
(1) பெண்கள், முதியவர், விவசாயிகள்
(2) முதியவர், தொழிலாளர், இளைஞர்கள்
(3) பெண்கள், இளைஞர்கள், சிறுவர்
(4) கேள்வியாளர், இளைஞர், முதியவர்
(5) நுகர்வோர், சிறுவர், பெண்கள்

42) நூல்நிலையம், ஆவண காப்பகம், நூதனசாலைகள் என்பன
(1) அச்சு ஊடகங்களுள் உள்ளடங்கும்.
(2) நவீன் ஊடகங்களுள் உள்ளடங்கும்.
(3) இலத்திரனியல் ஊடகங்களுள் உள்ளடங்கும்.
(4) ஊடக நிலையங்களாகக் கொள்ளப்படுகின்றன.
(5) சினிமா ஊடகங்களாக உள்ளன.

43) ஊடகங்கள் பெறுநர்கள் பயன்படுத்துதல் தொடர்பாக ஆராயப்பட்ட போது மிகவும் பொருந்தாத கூற்றாக கொள்ள முடியாதது
(1) மகிழ்ச்சியாக இருத்தல்
(2) தகவலை அறிவதற்காக
(3) அடையாளப்படுத்துவதற்காக
(4) பொழுதுபோக்கிற்காக
(5) எல்லோரும் பயன்படுத்துவதற்காக

44) “ஊடக அறிவு என்பது ஜனநாயக சமூகத்தில் ஊடகம் செய்கின்ற பணிகளை உணர்ந்து கொள்ளுதல், மதிப்பிடுதல், உள்ளடக்கத்தின் குறைநிறைகளை சீர்தூக்கிப் பார்த்தல்” எனும் கருத்தை முன்வைத்த அமைப்பு
(1) தகவல் திணைக்களம்
(2) உலக வங்கி
(3) சார்க் அமைப்பு
(4) யுனெஸ்கோ நிறுவனம்
(5) ஐக்கிய நாடுகள் சபை

45) ஊடகங்களின் கடமைகளும், பொறுப்புக்களும் பற்றி மிகப் பொருத்தமான கூற்றாக அமையாதது
(1) சமூகத்தில் நீதி, நியாயம் நிலைக்கப் பேசுதல்
(2) சமூகத்தில் பிரச்சினைகளை தூண்டிவிடுதல்
(3) ஜனநாயக வாழ்க்கை நெறிக்கு உதவுதல்
(4) கலாசாரம், பண்பாட்டு விடயங்களை வெளிக்கொணர்தல்
(5) ஆள்பவர் - ஆளப்படுபவரிடையே சீரான தகவலை அளித்தல்

46) சிறுவர்களுக்கு ஊடகங்களால் ஏற்படும் எதிரான தாக்கமாகக் கொள்ளக்கூடியது
(1) கற்றலுக்கு உதவுகின்றது.
(2) பொது அறிவினை வளர்க்கின்றது.
(3) உலக விடயங்களை அறிய உதவுகின்றது.
(4) புதிய தகவல்கள் கிடைக்கின்றன.
(5) வன்முறையான மனநிலையை வளர்த்தல்

47) “அரசியல், கலாசாரம் முதலான மனித வாழ்வுடன் தொடர்புடைய அனைத்துப் பிரிவுகளும் மனிதர்களின் வாழ்வுக்கு ஏற்ற உற்பத்தி முறைகளுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படுகின்றன” என்பது
(1) லசார்பீல்டின் இருபடிமுறை மாதிரி
(2) மக்கள் ஊடக மாதிரி
(3) பரிமாற்ற மாதிரி
(4) சீன அபிவிருத்தி தொடர்பாடல் மாதிரி
(5) காந்தியடிகளின் தொடர்பாடல் மாதிரி

48) நவீன அபிவிருத்தி தொடர்பாடல் முறைகளாகக் கொள்ள முடியாதது
(1) நாட்டார் பாடல், சஞ்சிகைகள்
(2) விளம்பரங்கள், சொகரி
(3) நாட்டார் பாடல், தெவொல்
(4) புத்தகம், திரைப்படம்
(5) விளம்பரங்கள், பலி

49) முரண்பாடு தீர்த்தல் பற்றி பல்வேறு மதக் கோட்பாடுகளும் கூறுகின்றன. அந்த வகையில் குரோதத்தினால் குரோதம் தணிக்கப்படமாட்டாது. குரோதமற்ற செயலினால் குரோதம் தணிக்கப்படும்” எனக் கூறப்பட்டது
(1) கிறிஸ்தவ மதப் பிரவேசம்
(2) பௌத்த மதப் பிரவேசம்
(3) சர்வதேச வாதம்
(4) இஸ்லாம் மதப் பிரவேசம்
(5) தர்ம சாஸ்திரம்

50) வெகுசன ஊடகங்களின் நேரம் அல்லது அளவைக் கொள்வனவு செய்வதன் மூலம் பார்வையாளர்களை அல்லது நேயர்களை அடைய முயற்சிப்பவர்கள்
(1) ஊடக உரிமையாளர்
(2) அனுசரணையாளர்
(3) வர்த்தக விளம்பரதாரர்
(4) பொதுசனத் தொடர்பாளர்
(5) சமூக சேவையாளர்